Registered as a Newspaper  பக்கங்கள் 04  விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM  மக்கள் தினசரி  Peoples Daily

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  கார்த்திகை 30  (15-12-93)  புதன்கிழமை  ஓசை 300

## 1993இல் வெளியாகிய நூல்களுக்கு பரிசில்கள், விருதுகள் வழங்கப்படும்

1993ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஈழத்தில் வெளியான ஈழத்துப் படைப்பாளிகளின் சிறந்த நூல்களுக்கான பணப்பரிசில்களும் பாராட்டு விருதுகளும் வழங்கப்பட உள்ளதாக யாழ். இலக்கிய வட்டம் - இலக்கியப் பேரவை அறிவித்துள்ளது. படைப்பாளிகள் அல்லது வெளியீட்டாளர் தமது நூல்களின் பிரதி ஒன்றை தமக்கு 1994பெப்ரவரி இறுதிக்குள் அனுப்பிவைக்குமாறு யாழ். இலக்கிய வட்டத்தினர் கேட்டுள்ளனர். பரிசீலனைக் குழுவினரால் தெரிவு செய்யப்படும் நூல்களுக்கான பரிசிலும் விருதுகளும் அடுத்தஆண்டு நடைபெறும்விழாவில் வைத்து வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. நவீனம் (நாவல்), சிறுகதைத் தொகுதி, நாடகம், காவியம் (கவிதை), சிறுவர் இலக்கியம், அறிவியல், சமய இலக்கியம், கவிதைத்தொகுதி, இலக்கியஆய்வு ஆகிய தலைப்புகளில சிறந்தநூல்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

# கொழும்புத் துறைமுகத்தை விடுதலைப் புலிகள் தாக்கலாம்!

## புலனாய்வு தகவலை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகத்தை விடுதலைப் புலிகள் தாக்கலாம் என சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் எச்சரித்ததைத் தொடர்ந்து துறைமுகப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. மேலும் துறைமுகக் களஞ்சியப் பகுதிகளில் அடிக்கடி தேடுதல் வேட்டையும் இடம்பெற்றுவருவதாகவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றித் தெரியவருவதாவது, விடுதலைப்புலிகள் தமது அடுத்த தாக்குதல் இலக்காக கொழும்பு துறைமுகத்தை தெரிவு செய்துள்ளனர் என தெரியவந்துள்ளதாக சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் கூறப்படுவதாவது; ''பலகோடி ரூபா பெறுமதியான ரொக்கட் மோட்டார்கள் ரவைகள் என்பன இரண்டு கப்பல்கள் மூலம் கொழும்பு துறைமுகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல் பிரிவு கொழும்பில் பிரவேசம்

### பொலிஸ் அதிகாரி தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் குண்டுத் தாக்குதல் பிரிவைச் சேர்ந்த குழு ஒன்று கொழும்பிற்குள் பிரவேசித்திருக்கிறது. என்பதனால் கொழும்பிலும் பிரதான நகரங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தியிருப்பதாக பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொழும்பிற்குள் பிரவேசித்திருக்கும் இக் குழுவினருக்குள் புலிகளின் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த தகவல் வழங்குபவர்களும் இருப்பதாகவும் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## தாக்குதலில் காயமடைந்த அதிகாரி மரணம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் படுகாயம் அடைந்தவிசேட அதிரடிபடையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் மரணமடைந்துள்ளார்.

திருகோவில், தம்பிலுவில் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடி பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நவம்பர் 27ஆம் திகதி நடைபெற்ற சண்டையின்போது அவ் அணிக்கு தலைமை தாங்கிய அதிகாரி ஆர். கே. கே திசாநாயக்காவே மேற்படி தாக்குதலில் மரணம் அடைந்தார்எனதெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வு பெற்ற அதிகாரிகளை இராணுவத்தில் சேர்க்க முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு படைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களின் சேவையை மீண்டும்பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் தலைமையில் கடந்த 2ஆம் திகதி நடை... போதையபடைத்தளபதிகள், முன்னாள் படைத்தளபதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு-கிழக்குத் தவிர்ந்த

## முல்லைத்தீவு முகாமிற்கு புலிகளால் ஆபத்து

(கொழும்பு)

முல்லைத்தீவு இராணுவ முகாமைத் தாக்கி அழிக்க விடுதலைப்புலிகள் திட்டமிட்டு வருவதாக சிறிலங்கா புலனாய்வுத்துறை அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'திவயின' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இதற்கான திட்டங்களை ஏற்கனவே தயார் செய்துள்ளனர் எனவும், இதனை முறியடிக்க இராணுவத்தினர் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மண்கிண்டிமலை, யாழ்தேவி, பூநகரி தாக்குதல் வரிசையில் அதனைவிடப் பெரிதாக இத் தாக்குதல் அமையும் என இராணுவத்தினர் கருதுவதாக 'திவயின' மேலும் தெரிவித்துள்ளது.

## ஆரையம்பதி இளைஞர் கொழும்பில் தேடப்படுகிறார்

(கொழும்பு)

நீலன் எனவும் பொட்டன் எனவும் அழைக்கப்படும் சின்னத்தம்பி சோமநாதன் எனும் மட்டக்களப்பு ஆரையம்பதி வாசியை தாம் தேடி வருவதாக கொழும்பு பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. பல கொலைகளுடன் தொடர்புள்ள இவர் குறித்த தகவல்கள் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்தது

## மறியல் போராட்டம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக சமூக சேவைப் பகுதிமுன் நேற்று நடாத்தப்பட்ட மறியல் போராட்டம் சிறிது நேரத்தில் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சமூகசேவை பகுதி பிரதிப் பணிப்பாளர், அரச அதிபர் வரும்வரை தம்மால் எதுவும் செய்யஇயலாதெனவும் மறியல் செய்வதால் வறுமை நிவாரண முத்திரைக்கான கொடுப்பனவுகளையும் தம்மால் வழங்க முடியாமல் போய் விடுமென தெரிவித்ததைஅடுத்து மறியல் போராட்டம் கைவிடப்பட்டதாக தெரிய வருகின்றது.

இம் மறியல் போராட்டம் பற்றி கூறிய சமூக சேவை பிரதிப்பணிப்பாளர், வறுமை நிவாரண உணவு முத்திரைக்கான கொடுப்பனவுகள் சமூக சேவை அமைச்சினால் வழங்கப்படுவதெனவும் இக் கொடுப்பனவுகள் தொடர்பாக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு சமர்ப்பித்த கொடுப்பனவுகள் வழங்கப் பட்டுவிட்டதெனவும் மாணவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு

## நுவரெலியா நகரத்தில்

பிற்குள் பிரவேசித்திருக்கிறது. என்பதனால் கொழும்பிலும் பிரதான நகரங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தியிருப்பதாக பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ணாய்வுத்துறையைச் சேர்ந்த தகவல் வழங்குபவர்களும் இருப்பதாகவும் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# தாக்குதலில் காயமடைந்த அதிகாரி மரணம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் படுகாயம் அடைந்தவிசேட அதிரடிபடையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் மரணமடைந்துள்ளார்.

திருகோவில், தம்பிலுவில் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடி பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நவம்பர் 27ஆம் திகதி நடைபெற்ற சண்டையின்போது அவ் அணிக்கு தலைமை தாங்கிய அதிகாரி ஆர். கே. கேதிசாநாயக்காவே மேற்படி தாக்குதலில் மரணம் அடைந்தார்எனதெரிவிக்கப்படுகிறது.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு திட்டம் சமர்ப்பிக்குக

## அஸ்கிரிய மகாநாயக்கர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுத்திட்டம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் வண. சந்தானந்த தேரோ கேட்டுக்கொண்டுள்ளார்.

அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களிடமும் அவரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டங்கள் தெளிவாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆண்டு 8 மாணவருக்கும் புலமைப் பரிசில் பரீட்சை

(கொழும்பு)

எட்டாம் ஆண்டு மாணவர்வர்களுக்கும் புலமை பரிசில் பரீட்சை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வி உயர்கல்வி அமைச்சர் லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

இத் திட்டம் தற்போது பரிசீலனையில் இருப்பதாகவும் இதுபற்றி முடிவு விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து துறைமுகப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. மேலும் துறைமுகக் களஞ்சியப் பகுதிகளில் அடிக்கடி தேடுதல் வேட்டையும் இடம்பெற்றுவருவதாகவும் கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றித் தெரியவருவதாவது, விடுதலைப்புலிகள் தமது அடுத்த தாக்குதல் இலக்காக கொழும்பு துறைமுகத்தை தெரிவு செய்துள்ளனர் என தெரியவந்துள்ளதாக சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் கூறப்படுவதாவது; ''பலகோடி ரூபா பெறுமதியான ரொக்கட் மோட்டார்கள் ரவைகள் என்பன இரண்டு கப்பல்கள் மூலம் கொழும்பு துறைமுகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வு பெற்ற அதிகாரிகளை இராணுவத்தில் சேர்க்க முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு படைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களின் சேவையை மீண்டும்பெற்றுக்கொள்வற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. வடக்கு-கிழக்கு பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மட்டும் சேவையாற்றுவதற்கு என்று அவர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் தலைமையில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற விசேட மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளரின் காரியாலயத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் தற்போதையபடைத்தளபதிகள், முன்னாள் படைத்தளபதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு-கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இப்பொழுது சேவையாற்றிவரும் பாதுகாப்புப் படையினரை வடக்கு - கிழக்குப் பகுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உலக விடுதலை இயக்கங்கள் எதனிடமும்

# புலிகளின் கடற்படைப் பிரிவுபோன்று பலம்பொருந்திய அமைப்பு இல்லை

(கொழும்பு)

''தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உள்ளதுபோல் வெல்லமுடியாத கடற்படைப் பிரிவு ஒன்று உலகிலுள்ள எந்த அரசு எதிர்ப்பு ஆயுதக் குழுவிடமும் இல்லை என்றே கூறலாம்.'' என சண்டே ஐலண்ட் தெரிவித்துள்ளது.

கடற்புலிகள்குறித்து சண்டே ஐலண்ட்டில் தராக்கி எழுதிய கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அக்கட்டுரையில், விடுதலைப் புலிகள் தமது அடுத்த கட்ட நடவடிக்கையாக மன்னாரில் இருந்து புத்தளம் வரையான வடமேற்குக் கரையோரப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முயற்சியிலும், தமது கடற்படைத் தளங்களை ஒன்றிணைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சை மேற்கொள்காட்டித் தெரிவிக்கப்பட்டுள்ளது

மன்னாரிலிருந்து புத்தளம் வரையுள்ள வடமேற்கு கடற்பிராந்தியத்தை புலிகள் தங்கள் எல்லைகளாக வரையறுத்துள்ளார்கள் என்றும் இப்பிரதேசத்தைக் கண்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

# மறியல் போராட்டம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக சமூக சேவைப் பகுதிமுன் நேற்று நடாத்தப்பட்ட மறியல் போராட்டம் சிறிது நேரத்தில் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சமூகசேவை பகுதி பிரதிப் பணிப்பாளர், அரச அதிபர் வரும்வரை தம்மால் எதுவும் செய்யஇயலாதெனவும் மறியல் செய்வதால் வறுமை நிவாரண முத்திரைக்கான கொடுப்பனவுகளையும் தம்மால் வழங்க முடியாமல் போய் விடுமென தெரிவித்ததைஅடுத்து மறியல் போராட்டம் கைவிடப்பட்டதாக தெரிய வருகின்றது.

இம் மறியல் போராட்டம் பற்றி கூறிய சமூக சேவை பிரதிப்பணிப்பாளர் ,வறுமை நிவாரண உணவு முத்திரைக்கான கொடுப்பனவுகள் சமூக சேவை அமைச்சினால் வழங்கப்படுவதெனவும் இக் கொடுப்பனவுகள் தொடர்பாக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு சமர்ப்பித்த கொடுப்பனவுகள் வழங்கப் பட்டுவிட்டதெனவும் மாணவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நுவரெலியா நகரத்தில் 25 தமிழர்கள் கைது

(கொழும்பு)

நுவரெலியா நகரில் பொலிஸ் விசேட அணியினர் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின் போது வடக்கு கிழக்கை சேர்ந்த சுமார் 25க்கு மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டார்கள் என நுவரெலியா பொலிசார் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் முதல் வாரத்தில் நடைபெற்ற இச் சுற்றிவளைப்பின் போது மேற்படி தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் நகரில் உள்ளே வந்த வாகனங்களிலும் நகரை விட்டு வெளியேற தயாராக இருந்த வாகனங்களிலும் பயணம் செய்தோரும் மற்றும் வீடுகள் விடுதிகளில் தங்கி இருந்தோரும் இதில் அடங்குவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

இவர்களில் அநேகர் கொழும்புடன் தொடர்பு கொண்டு இருந்தவர்கள் என்றும் கொழும்பில் நடைபெறும் சுற்றி வளைப்பில் இருந்து தப்பித்து கொள்ளும் நோக்குடன் இவர்கள் இங்கு வந்து இருந்ததாக பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் நாட்களில் தொடர்த்து மலையகத்தில் ஏனைய பகுதிகளிலும் இதே போன்ற சுற்றி வளைப்பு நடைபெறும் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# பொய்த்தகவலை வெளியிடுவோர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்

## சிறிலங்கா அரசு அறிவிப்பு

(கொழும்பு)

பொய்யான தகவல்களை வெளியிடும் தொடர்பு சாதனங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

பொய்தகவலை வெளியிடும் புதினத்தாள்கள், துர்நோக்குடன் பிரசுரமாகும் பிரசுரங்கள், பாலியல் தொடர்பாக வெளிவரும் வெளியீடுகள் ஆகியவற்றிற்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் இத் தொடர்பு சாதனங்கள்மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தகவல் திணைக்கள செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

நபர் ஒருவருக்கு மாசுகற்பிக்கும் வகையில் வெளியிடப்படும் பிரசுரங்களுக்கு எதிராகவும் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பத்திரிகைச் சபைச் சட்டத்தின் 15-வது பிரிவின் கீழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர் படகு நோக்கி கடற்படை பீரங்கித் தாக்கு

(தொல்புரம்)

சுழிபுரம் சவுக்கடித்துறை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி சிறிலங்காகடற்படை விசைப்படகுகளிலிருந்து அகோர பீரங்கித்தாக்குதலை கடற்படையினர்மேற்கொண்டனர்.

கடந்த ஞாயிறன்று பகல் 11.20 மணியளவில் ''வீரயா சூரயா'' ''சுப்பர்டோறா'' போன்ற இரு விசைப்படகுகளில் சுழிபுரம், திருவடிநிலை கடற்பரப்பில் ரோந்து சுற்றி வந்த கடற்படையினர் படுப்பு வலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி சுமார் 25 நிமிடம் வரை தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் சில மீனவர்கள் கடலில் குதித்தும், மீன்பிடி உபரக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளிக்கு முன் தபால்களை சேர்க்கவும்

'வாதுவ' கப்பலில் கடிதங்களை அனுப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் கடிதங்களை அனுப்பும்பொதுமக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தங்கள் கடிதங்களை தங்கள் வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள அஞ்சலகங்களிலோ அல்லது உப அஞ்சலகங்களிலோ அஞ்சல் பெட்டிகளிலோ சேர்க்குமாறு யாழ்ப்பாணம் பிரதமஅஞ்சல் அதிபர் வேண்டுகின்றார்.

# போர்முனைத் தேவைக்கென ஏழு விசேட மருத்துவ குழு

## எப்பொழுதும் தயார்நிலையில் இருக்க ஏற்பாடு

(கொழும்பு)

அவசர சிகிச்சை அளிப்பதற்கு என ஏழு விஷேட மருத்துவ குழுக்கள் வடக்கு கிழக்கு பகுதியை அண்டிய பகுதியில் தயாராக வைக்கப்படும் என சுகாதார மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ் வைத்திய குழுவில் வைத்திய நிபுணர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், டாக்டர்கள், தாதிகள் மருந்துப்பொருள்கள், அத்துடன் நவீன வசதிகளை உள்ளடக்கியதாக அமைய இருக்கின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலின்போது காயமடைந்தவர்களை கொண்டுசெல்லும்போது ஏற்படும் சிக்கல்களை தவிர்க்கும் நோக்குடன் இத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், காயமடைந்தவர்கள் உள்ள இடங்களுக்கு இவ் வைத்திய குழுக்கள் அனுப்படும் என்றும், இவர்கள் காயமடைந்த படையினர் உள்ள முகாம் அல்லது அதற்கு அண்மையில் அமைந்த பெரிய முகாமிற்கு கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட குறிப்பிட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

# தனியார் கல்வி நிலைய மாணவர்களால் இடையூறு

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிலைய மாணவர்கள் சிலர் தனியார் கல்வி நிலைய இடைவேளைகளைப் பள்ளிக் கூடங்களுக்குச் சென்று கழிப்பதாகச் தெரியவருகின்றது. இவர்கள் பள்ளிக் கூடங்களுக்குச் சென்று காலத்தைக் கழிப்பதால் பள்ளிக்கூட நிர்வாகத்துக்குஇடைஞ்சல் ஏற்படுவதாகப் பள்ளிக்கூட அதிபர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய கல்லூரி யொன்றில் தனியார் கல்வி நிலைய மாணவர்கள் கல்லூரியில் நேரத்தைக் கழிக்க வேண்டாம் என்ற அறிவுறுத்தல் பாடசாலை வாசலில் எழுதி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்


### வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்விட்டா, மாலமட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜாம், புரோடினேக்ஸ், பியர், கோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிடெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-8054)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

### கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும் சகல கடிகாரங்கள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோவேக்ஸ் (Dilka Watch & Radio Works) ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) கிளை - கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8129)

### பசன் பழம் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களை (Passion Fruit) நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seeniar Lane Jaffna. (சி-8096)

### 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு

புதிய பிரிவு ஆரம்பம் 18-12-1993 சனிக்கிழமை 2.00 மணி கணிதம், தமிழ் திரு. கனகசபை (ஓய்வுபெற்ற அதிபர்) கடந்த காலங்களில் சிறந்தபெறுபேறுகளை பெற்றுத் தருகின்ற ஓர் நிறுவனம் இதுவே புதிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும் பாரதி கல்வி நிலையம் - சித்தன்கேணி (6891)

### போர் முரசம் கேட்கிறது

'போர் முரசம் கேட்கிறது' 'கொழும்பில் கல்யாணம்' நாடகங்களை எழுதித்தயா


# இடம்பெயர்ந்த மக்களுக்காக உடன் நடவடிக்கை எடுக்குக!

## தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பருவகால மழையினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவரும் தீவக இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் யாழ் அரசாங்க அதிபரிடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

காரைநகர் உட்பட தீவகப் பகுதிகளில் இருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து சங்கானை, நல்லூர், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள முகாம்களிலும், மற்றும் பொம்மைவெளி போன்ற தாழ்ந்த நிலப் பிரதேசங்களிலும் வாழ்ந்து வரும் பலநூற்றுக்கணக்கான மக்களே அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த கடும்மழையினால் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

சங்கானை உதவிஅரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட இடங்களில் காணப்படும் முகாம்கள் சிலவற்றில் உள்ள சில வீடுகள் கூரைகள் இன்றியுள்ளன. இதனால் அங்குள்ள சிறுவர்களும், குழந்தைகளும் மிகவும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். ஏனைய முகாம்களில் எல்லாம் நிலம் ஊறிய நிலையில் காணப்படுகின்றன.

மேலும், இம்முகாம்களைச் சூழவும், முகாம்களினுள்ளும் வெள்ளம் தேங்கி நிற்பதால் மலசல கூடங்கள் நீரால் நிரம்பிய நிலையில் உள்ளன. இதனால் மக்கள் மலசலம் கழிக்க வசதியின்றி மிகவும் அல்லற்படுகின்றனர். இவர்கள் சுற்றியுள்ள பற்றைகளையும், புதர்களையுமே இதற்காகப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் சுகாதார சீர்கேடுகள் தோன்றியுள்ளதுடன் இவர்கள் நோயினால் பாதிக்கப்படும் அபாயநிலை தோன்றி வருகிறது.

அத்துடன் அங்குள்ள சிறுவர் பாடசாலைகளும் நனைந்து நிலம் ஊறிக் காணப்படுகின்றன. இதுவரை காலமும் நிலத்திலிருந்தே தமது ஆரம்பக் கல்வியைக் கற்று வந்த சிறார்கள் இதனால் கல்வியைத் தொடர முடியாதுள்ளனர்.

எனவே இம்மக்களின் அவல நிலையை உணர்ந்து அனைத்து வீடுகளுக்கும் நிலவிரிப்பாக சாக்குகளையோ, றபர் சீற்றுகளையோ வழங்குவதுடன் வெள்ள நிவாரணமும் கிடைக்க வழிசமைத்துத் தருமாறு இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகம் யாழ் மேலதிக அரச அதிபரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

## போட்டிகள் நடத்த சம்மேளனம் ஏற்பாடு

(தொல்புரம்)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் 1993ஆம்ஆண்டிற்கானபேச்சு கட்டுரை, பொது அறிவுப் போட்டிகள்நடாத்தவுள்ளது.

மேற்படி போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு. மேற் பிரிவு, அதிமேற் பிரிவு, என ஆறு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுடையோர் தமது விண்ணப்பங்களை 15-12-93இற்கு முன்பதாக சனசமூக நிலையம், உப சமாசம், சமாசம் ஊடாகச் சம்மேளனக் காரியாலயத்தில் கையளிக்குமாறு தலைவர் வை. செகராசசிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## பாவனைக்குதவாத பாண் குடாநாட்டில் விற்பனை

நன்றாக வேகாத ஈரத்தன்மை அதிகமான பாவனைக்குதவாத பாண் யாழ். குடாநாட்டில் விற்பனையாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாணில் நாற்பது சதவிகிதத்திற்கு அதிகமான ஈரத்தன்மை இருக்கக் கூடாது என்று உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ரி. மகாதேவன் தெரிவித்தார்.

இது குறித்த அறிவுறுத்தல் கூட்டங்கள் பல இடங்களில் நடாத்தப்பட்டு வருவதாக யாழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வட்டத்தினர் தெரிவிக்கின்றனர்.

## இலக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் மணிவிழா நிகழ்ச்சிகளின் வரிசையில் இலக்கிய சந்திப்பு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



திரு. த. சுப்ரமணியம்

தோற்றம் 01-10-1951 மறைவு 15-11-1993

உம்முடைய ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி
சு. இன்பமலர்
மானிப்பாய் தெற்கு. (6890)


## மாதிரி குடியேற்றத் திட்டம் உடுவிலில் திறந்து வைப்பு

(உடுவில்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட மாதிரிக் குடியேற்றத் திட்டமொன்று உடுவில் ஆலடிப் பகுதியில் நேற்று மூன்தினம் திறந்து வைக்கப்பட்டது. உடுவில் வட்டவைப் பொறுப்பாளர் திரு. ஒப்பிலறிவன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தேசியக் கொடியை திரு. வெள்ளை ஏற்றி வைக்க, மங்கள விளக்கினை புனர்வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ரவி, சுன்னாகம் காவல்துறைப் பொறுப்பாளர் செல்வி பிருதுராணி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

குடியிருப்பை வலிகாமம் அரசியற் பொறுப்பாளர் திரு. திருக்குமரன் திறந்து வைத்தார். குடியிருப்பாளர்களுக்கான திறப்புக்களை யாழ். மாவட்ட துணை அரசியற் பொறுப்பாளர் இளையவன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய இணைப்பாளர் திரு. பாலகிருஷ்ணன், திரு. பாஸ்கரன் ஆகியோர் வழங்கினர். கருத்துரையை திரு. எழிலன் வழங்கினார்.

குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பரப்பில் அமைக்கப்பட்டிருந்தன. மொத்தமாக 19 குடியிருப்புகள் வலி. மேற்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு இக்குடியேற்றத் திட்டத்தில் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டன. (09), (11)

## மாவீரர் சோலை வனம் கெற்பலியில் திறப்பு

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இதுவரை காலமும் மண்மீட்புப் போரிலே வீரச்சாவினை தழுவிக் கொண்ட மாவீரர்களது நினைவாக மாவீரர் சோலை வனமொன்று கடந்த

சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாவீரர் சோலை வனத்துக்கான பெயர்ப்பலகையை யாழ். மாவட்டத் தளபதி திரைநீக்கம் செய்து வைத்

## பொலிஸில் பதிவு செய்தல்; கொழும்பில் சிரமம்

நீர்கொழும்பு, கொச்சிக்கடை பகுதிக்கு வரும் தமிழ் மக்கள் தாம் தங்கியிருக்கும் இடங்களில் பொலிசில் பதிந்து கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். புதிதாக வருபவர்கள் தமது பெயர்களை பதிவு செய்யும் பொருட்டு பொலிஸ் நிலையம் சென்றால் தற்போது பதிவு செய்வது இல்லை என கூறப்படுகிறது.

இதனால் தமது சொந்த உறவினர்களை கூட தற்காலிகமாக வீட்டில் வைத்திருக்க முடியாத நிலை இப்பகுதியில் உள்ளவர்களிடையே காணப்படுகிறது.

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரித் தளம் தகர்ப்பு வெற்றி நாளை யொட்டி கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் உள்ள பாடசாலையில் கல்விபயிலும் வறிய மாணவர்களுக்கு புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (22)

## நிதியுதவி

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் அண்மையில் யாழ்.கரையோரப் பகுதியில் நடைபெற்ற பயங்கரமான குண்டுத் தாக்குதலில் பலியான சில குடும்பங்களுக்கு நிதி உதவியாக தலா 5ஆயிரம் ரூபா வீதம் வழங்க தீர்மானித்துள்ளது.

இவ் ஆச்சிரம சுவாமி சித்ரூபானந்தா தனது கணக்காளர் மூலம் இதற்கான பணத்தை யாழ்.கத்தோலிக்க ஆயரிடம் கையளித்துள்ளார். (யோ)

## வங்கிப் பரீட்சை விபரங்கள்

(நமது நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளிலுள்ள எழுது வினைஞர், தமிழ் ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிகளுக்காக பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படவிருக்கும் பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்கள் பின்வரும் பாடங்களில் பரீட்சிக்கப்படவுள்ளதாக யாழ் அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழித் தேர்ச்சியும் பிறவும் ஒன்றரை மணித்தியாலமும் நுண் அறிவு—எண் தேர்ச்சியும் பொது அறிவும் ஒன்றரை மணித்தியாலமும் நடாத்தப்படவுள்ளதாகவும் இப்பரீட்சை மும்மொழிகளிலும் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவு கூருகின்றோம்..

1993-12-15

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் ஒந்தாச்சிமடம் பகுதியில் வீதிச்சோதனையில் ஈடுபட்ட சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

❋ குஞ்சுத்தம்பி தங்கவேல் (பாண்டிருப்பு கல்முனை)

இதேசம்பவத்தில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

❋ சாந்தன் (இராமக்குட்டி சாந்தகுமார் - பாண்டிருப்பு - கல்முனை)

1986ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

❋ சங்கரப்பிள்ளை இராசரட்ணம் (அக்கரைப்பற்று- அம்பாறை)

1987ஆம் ஆண்டு பொலநறுவையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். சுதன் (கந்தசாமி லோகநாதன்-தம்பலகமம் திருமலை)

முல்லைத்தீவு - 4-ம் கட்டையில் இந்தியப்படையி

TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seeniar Lane Jaffna. (சி-8096)

## 5-ம்ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு

புதிய பிரிவு ஆரம்பம் 18-12-1993 சனிக்கிழமை 2.00 மணி கணிதம், தமிழ் திரு. கனகசபை (ஓய்வுபெற்ற அதிபர்) கடந்த காலங்களில் சிறந்தபெறுபேறுகளை பெற்றுத் தருகின்ற ஓர் நிறுவனம் இதுவே புதிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும் பாரதி கல்வி நிலையம் - சித்தன்கேணி (6891)

## போர் முரசம் கேட்கிறது

'போர் முரசம் கேட்கிறது' 'கொழும்பில் கல்யாணம்' நாடகங்களை எழுதித்தயாரித்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடகநூல், முதலாம்பிள்ளை 30/- சிலபிரதிகளே உள்ளன. பூபாலசிங்கம் புத்தகசாலை. (6791)

## வடிகால் அமைப்பு

(தொல்புரம்)

வலி மேற்கு பகுதிகளில் பெரும்மழையினால் ஏற்பட்ட வெள்ளம் தேங்கி நிற்கும் பகுதிகளில் வடிகால்கள் அமைக்கப்படுகின்றன.

...தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தேசியக் கொடியை திரு. வெள்ளை ஏற்றி வைக்க, மங்கள விளக்கினை புனர்வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ரவி, சுன்னாகம் காவல்துறைப் பொறுப்பாளர் செல்வி பிருதுராணி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

குடியிருப்பை வலிகாமம் அரசியற் பொறுப்பாளர் திரு. வழங்கினர். கருத்துரையை திரு. எழிலன் வழங்கினார்.

குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பரப்பில் அமைக்கப்பட்டிருந்தன. மொத்தமாக 19 குடியிருப்புகள் வலி. மேற்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு இக்குடியேற்றத் திட்டத்தில் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டன. (09), (11)

# மாவீரர் சோலை வனம் கெற்பலியில் திறப்பு

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இதுவரை காலமும் மண்மீட்புப் போரிலே வீரச்சாவினை தழுவிக் கொண்ட மாவீரர்களது நினைவாக மாவீரர் சோலை வனமொன்று கடந்த 24-11-93 அன்று நண்பகல் 12-00 மணியளவில் கெற்பலியில் திறந்து வைக்கப்பட்டது.

தென்மராட்சிக் கோட்ட பொறுப்பாளர் திரு. பரணி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைக்க, தென்மராட்சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாவீரர் சோலை வனத்துக்கான பெயர்ப்பலகையை யாழ். மாவட்டத் தளபதி திரைநீக்கம் செய்து வைத்தார்.

கெற்பலியில் சுமார் 30 ஏக்கர் காணி இந்த மாவீரர் சோலை வனத்துக்கு சேர்க்கப்பட்டிருப்பினும் இம்முறை மாவீரர் வாரத்தில் மட்டும் 10 ஏக்கர் விஸ்தீரணமான காணியில் பல இன மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன. இந்த சோலைவனப் பராமரிப்பினை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்தொடர்ந்து மேற்கொள்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## கட்டுநிதி வந்தது

யாழ். மாவட்ட பாடசாலை ஆசிரியர்களின் இம் மாதச்சம்பளத்தை வழங்குவதற்கான கட்டுநிதி யாழ் கல்வித் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளதாகவும் இம் மாத ஆசிரியர் சம்பளம் 17ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## வருகை தரவும்

எதிர்வரும் 22ஆம் திகதி தொடங்க இருக்கும் ஆசிரிய கலாசாலை மாணவர்களிற்கான இறுதிப் பரீட்சையில் தோற்ற இருக்கும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று பிரவேசப் பத்திரத்தில் கையொப்பமிடுவதற்கு கலாசாலைக்கு வருகை தருமாறு அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்

## பிரதிக் கல்விப் பணிப்பாளரை சந்திக்க கோரிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்தினுள் இடம்பெயர்ந்து பிறிதொரு பாடசாலையில் தற்காலிகமாக கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களும், தத்தம் நிரந்தரப் பாடசாலைக்குரிய கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரை எதிர்வரும் வெள்ளியன்று காலை ஒன்பது மணிக்கு தவறாது சந்திக்கும் படியும் கோரும் விபரங்களை ஒப்படைக்கும் படியும் யாழ்ப்பாண பிரதேச கல்விப் பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி கோரிக்கை விடுத்துள்ளார்.

## வீதி புனரமைப்பு

நெடுங்கேணி வட்டத்தில், சேனைப்புலவு கிராமத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தின்கிராமிய உற்பத்திக் குழுவினால் அக்கிராமத்தின் போக்குவரத்தைச் சீர்செய்யும் முகமாக இரண்டு கிமீ நீளமான சேனைப்புலவு வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

போரூட் நிறுவனத்தின் உதவியுடன் அப்பகுதி மக்களையும் இணைத்து இவ்வீதி அகலமாக்கப்பட்டு நீர் வடிந்தோடுவதற்கான வடிகாலும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

°° °° °°

புதுக்குடியிருப்பு வட்டத்தில் இரணைப்பாலை, கோம்பாவில், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு கிராமங்களில் உள்ள வீதிகளை புனரமைக்கும் வேலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அப்பகுதி கிராமிய உற்பத்திக்குழுககள் மக்களுடன் இணைந்து செய்து முடித்துள்ளன.

நீண்டகாலமாக திருத்தியமைக்கப்படாது குண்டும்குழியுமாக இருந்த இந்த வீதிகள் செப்பனிடப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகின்றன.

...னாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (22)

## நிதியுதவி

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் அண்மையில் யாழ்.கரையோரப் பகுதியில் நடைபெற்ற பயங்கரமான குண்டுத் தாக்குதலில் பலியான சில குடும்பங்களுக்கு நிதி உதவியாக தலா 5ஆயிரம் ரூபா வீதம் வழங்க தீர்மானித்துள்ளது.

இவ் ஆச்சிரம சுவாமி சித்ரூபானந்தா தனது கணக்காளர் மூலம் இதற்கான பணத்தை யாழ்.கத்தோலிக்க ஆயரிடம் கையளித்துள்ளார். (யோ)

...விபரங்கள்

(நமது நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளிலுள்ள எழுது வினைஞர், தமிழ் ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிகளுக்காக பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படவிருக்கும் பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்கள் பின் வரும் பாடங்களில் பரீட்சிக்கப்படவுள்ளதாக யாழ் அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழித் தேர்ச்சியும் பிறவும் ஒன்றரை மணித்தியாலமும் நுண் அறிவு—எண் தேர்ச்சியும் பொது அறிவும் ஒன்றரை மணித்தியாலமும் நடாத்தப்படவுள்ளதாகவும் இப்பரீட்சை மும்மொழிகளிலும் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

POSTGRADUATE DIPLOMA / DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992/93

The interview for the above course will be held on 1993-12-17 from 2.00 p.m to 4.00 p.m in the Board Room of the University of Jaffna.

The list of selected candidates for the interview is placed in the University Notice Board. Please collect the interview letter personally at the Academic Branch, University of Jaffna.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
1993.12.14

(சி-8130)

---

தொண்டைமானாறு வெளிக்களநிலையம்

**வருடாந்தப் பொதுக் கூட்டம்**

காலம்:- **1993-12-19** ஞாயிற்றுக்கிழமை
மு. ப. **9.30** மணி
இடம்:- யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

நிலையத் தலைவர் திரு. க சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் தவறாது சமுகம் தருக.

1993-12-12 நா. சுவாமிநாதன்.
(சி-8131) செயலாளர்

---

**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 93இல் பரீட்சை எடுத்த மாணவர்கட்கான

**கலை, வர்த்தக மீட்டல் வகுப்புகள்**

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம் : 19-12-93 8 a. m**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

பொருளியல் : திரு. க. கலாகரன்
வர்த்தகம் : திரு. தேவா
கணக்கியல் ; திரு. S. K. பிரபாகரன்
அளவையியல்: திரு. விக்கி
தமிழ் : திரு. குழந்தை
இந்துநாகரிகம்)
இந்துசமயம் )-: திரு காரை. சுந்தரம்பிள்ளை
புவியியல் : திரு. குணராசா
அரசியல் : திரு ஜெயகாந்தன்
வரலாறு : திரு. ஸ்ரீதரன்

DAY CLASS வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன.
அனுமதிகளை உடன் பெறவும்

(சி-8123)

---

# நினைவு கூருகின்றோம்..

**1993-12-15**

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் ஒந்தாச்சிமடம் பகுதியில் வீதிச்சோதனையில் ஈடுபட்ட சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

❋ **குஞ்சுத்தம்பி தங்கவேல்** (பாண்டிருப்பு கல்முனை)

இதேசம்பவத்தில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

❋ **சாந்தன்** (இராமக்குட்டி சாந்தகுமார் - பாண்டிருப்பு - கல்முனை)

1986ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

❋ **சங்கரப்பிள்ளை இராசரட்ணம்** (அக்கரைப்பற்று- அம்பாறை)

1987ஆம் ஆண்டு பொலநறுவையில் சிறிலங்கா இராணுவததினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சுதன்** (கந்தசாமி லோகநாதன்-தம்பலகமம் திருமலை)

முல்லைத்தீவு - 4-ம் கட்டையில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் திருச்செல்வம்** (அந்தோனி குருஸ் அல்போன்ஸ் - செல்வபுரம் - முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழர்கள்.

1988ஆம்ஆண்டு வடமராட்சிக்கிழக்கு உடுத்துறை பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

வடமராட்சிப் பொறுப்பாளர்

**கப்டன் ராஜாராம்** (வீரகத்திப்பிள்ளை தர்மலிங்கம்-வெற்றிலைக்கேணி - வடமராட்சி)

யாழ்-கோப்பாயில் தேசவிரோதிகளால் பிடித்துச் செல்லப்பட்டு முகாமில் வைத்து கொலை செய்யப்பட்ட

நாட்டுப்பற்றாளரான

**அரலிங்கம் தேவதாசன்** (ஊரெழு)

சுன்னாகத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இணுவிலைச் சேர்ந்த விவசாயி.

1991ஆம் ஆண்டு நரந்தனை, செருக்கன் சந்தியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1992ஆம் ஆண்டு மட்டு-தம்பிலுவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சாஜகவேந்தன்** (அழகையா மோகன்- அக்கரைப்பற்று- அம்பாறை)

கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகுகள் மீது சிறிலங்காகடற்படையினர்மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 6 பொதுமக்கள்.

மட்டுவீதியில், கோரக்கல்லி மடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் சுட்டதில் பலியான 3 தமிழிளைஞர்கள்.

மட்டு - தெற்கு தம்பிலுவில் பகுதியில் மக்களுக்கான உணவுப் பொருட்கள் சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழிளைஞர்கள்

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து அச்சுவேலி, தோப்புப் பகுதியில் வீழ்ந்த எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 பொதுமக்கள்.

மட்டு வீதியில் கோரக்கல்லி மடுப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினரால் சுடப்பட்டு பின்னர் சடலமாக இழுத்துச் செல்லப்பட்ட 3 தமிழிளைஞர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்துசெயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8128)

சிந்தனைக்கு

தன்னைத் தானே சீர்திருத்திக் கொள்பவன்
அதன் மூலம் பிறரைச் சீர்திருத்தப் பெரிதும்
உதவுவான்

-தாமஸ் ஆடம்ஸ்

ஈழநாதம்

1, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 15-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ எண் - 05

## ஊர்வாயை மூட....

சிறிலங்கா அரசாங்கத்தின் பார்வை தற்பொழுது தென்னிலங்கைப் பத்திரிகைகள் மீது திரும்பியுள்ளன. பொய்யான தகவல்களை வெளியிடுகின்றன என்றும், தனிமனிதர்களுக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணுவதாகவும் அவற்றின் மீது குற்றம் சாட்டி அவற்றின் வாயை அடைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடும் பத்திரிகைகள், துர்நோக்கப் பிரசுரங்கள், பாலியல் பற்றிய வெளியீடுகள் ஆகியவற்றிற்கு எதிராகச் சட்டநடவடிக்கைகள் எடுப்பதற்குப் பொலிஸ்மா அதிபர் ஏற்பாடுகள் செய்துவருவதாகவும் தெரியவருகின்றது.

சிறிலங்கா பத்திரிகைகள் பொய்யான தகவல்களை வெளியிடுவதும், சமூக சீரழிவுகளுக்கு துணைபோகும் தகவல்களை பிரசுரிப்பதும், இன்று புதிதாகத் தோன்றியவையல்ல. நீண்டகாலமாகவே இலங்கையில் அமைதியின்மை தோன்றவும், இரத்த ஆறு ஓடவும் தென்னிலங்கைப் பத்திரிகைகளும் அரசியல்வாதிகள் போன்று கணிசமான பங்கு ஆற்றியே வந்துள்ளன. ஆனால், அன்று அரசியல்வாதிகளுக்கும் - குறிப்பாக அரசாங்கத்திற்கும் பத்திரிகைகளுக்கும் இடையில், ஒரே கொள்கை இருந்ததினால், அரசாங்கம் கூறுவதை பத்திரிகைகளும் முழுமையாக ஏற்றுக் கொண்டன. இதேபோன்றே சமூக மற்றும் கலாசார சீர்கேட்டிற்கும் அசாங்கம் கணிசமான பங்காற்றிவந்தது.

இந்த வகையில், கடந்த காலத்தில் பத்திரிகைகள் விட்ட தவறிற்கு தனியாக அவை மட்டும் காரணமல்ல. அரசாங்கம் அவற்றை தவறாக வழிநடத்திச் சென்றமையே காரணமாகும். எடுத்துக்காட்டாக 'லங்கா புவத்' போன்ற செய்தி ஸ்தாபனங்களால் முற்றிலும் உண்மைக்கு புறம்பான செய்தியினை அரசாங்கமே வெளியிட்டுவந்தது. பத்திரிகைகளும் அவற்றை கேள்வியின்றிப் பிரசுரித்து வந்தன.

இந்நிலையில், அண்மைக் காலத்தில் ஏற்பட்ட இராணுவத் தோல்விகள் கொழும்புப் பத்திரிகைகளுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தன. அவர்கள் எண்ணியது போன்றோ, அன்றி அரசு கூறியதுபோன்றோ, தமிழர் தேசிய இனப் போராட்டம் இராணுவ ரீதியில் தோற்கடிக்க

# புலிகள் தமிழீழம் நோக்கி படிப்படியாக முன்னேறுகின்றனர்

தமிழீழம்கோரி போராடி வரும் விடுதலைப் புலிகள் ஆறுதலாக-ஆனால் பலமாக -படிப்படியாக முன்னேறி வருகின்றார்கள்.

சுவிஸர் லாந்திலிருந்து வெளிவரும் 'ராகெஸ் அன்ட் டேயிர்கள்' என்ற பத்திரிகை சமீபத்தில் தனது தலைப்புச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற பூநகரி சமரைப் பற்றியே அதன் செய்தி இடம்பெற்றிருந்தது.

இதேமாதிரி பத்து வருட வரலாற்றில் மிகப் பெரிய தாக்குதல் என்று பூநகரி-நாகதேவன்துறை தளங்கள் மீதான தாக்குதலை இன்னொரு பத்திரிகை குறிப்பிட்டிருந்தது.

சுவிஸில் உள்ள பத்திரிகைகள், தொலைக் காட்சிகள், வானொலிகள் பூநகரி தாக்குதல் பற்றிய செய்தியை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டதோடு விடுதலைப் புலிகளின் துணிச்சலையும், தியாகத்தையும் குறிப்பிட்டிருந்தன.

## கிழக்கு பல்கலை விவசாய பீடத்திற்கு 10 மாணவர் மட்டுமே

(கொழும்பு)

கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்தில் 93ஆம் கல்வி ஆண்டில்460 பேரை அனுமதிப்பதற்கு இடம் இருப்பதாக பல்கலைக்கழக நிர்வாகம் கூறியுள்ள போதிலும் 191பேரை மாத்திரமே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகம் விவசாய பீடத்திற்கென நாற்பது பேரை அனுமதிக்கும்படி கோரப்பட்டிருந்த போதும் 10 பேரை மாத்திரமே மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பத்துப் பேரை வைத்துக் கொண்டு எவ்வாறு அப்பீடத்தை இயங்க வைப்பது என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## 200 கடற்படையினர் பற்றி தகவல் இல்லை

(கொழும்பு)

நாகதேவன்துறை கடற்படை முகாமில் இருந்த கடற்படையினரில் இருநூறுக்கும் அதிகமானோருக்கு என்ன நடந்தது என்பதே தெரியாமல் இருப்பதாக கடற்படைப் பேச்சாளர்தெரிவித்துள்ளார்.

நாகதேவன்துறை மற்றும் பூநகரி முகாம்களில் கடற்படையைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் உட்பட சுமார் 340பேர் இருந்ததாகவும் இவர்களில் 115பேர் மட்டுமே காயமடைந்தோ அன்றி காயமின்றியோ உயிர் தப்பிக் கொண்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன்இந்தநாகதேவன் துறை முகாம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டமையினால் இதற்கு ஏற்பட்ட சேதம் பற்றியோ, இழப்புகளின் மதிப்பீடு குறித்தோ முழுமையான விபரம்பெறமுடியாமல் இருப்பதாகவும்தெரிவித்தார்.

### பனம் விதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் இவ்வருடம் 2000 பனைவிதைகளை நாட்டியுள்ளனர். சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய இடங்களில் இவ் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

### பெற்றுக்கொள்ளவும்

தென்மராட்சிப் பகுதியில் பொது இடங்களில் விடப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கொடிகாமம், சாவகச்சேரி போன்ற பொது இடங்களில் அநாதரவாக காணப்பட்ட துவிச்சக்கரவண்டிகள்நான்கு தற்போது சாவகச்சேரி நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த அடையாளத்தைக் காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

(86)

## பரீட்சைவிடைத்தாள்களை மார்க்கோஎடுத்துச்செல்லும்

(யாழ்ப்பாணம்)

இன்றுடன் முடிவடைகின்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் விடைத் தாள்கள் ''மார்க்கோ'' கப்பலில் கொழும்பிற்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதற்கான உதவிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யாழ் செயலகம் ஆகியவற்றை தாம் கோரியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(பா)

## நிதிஒதுக்கீடுகிடைக்கவில்லை திட்டங்கள் கைவிட முடிவு

(கொழும்பு)

கல்வி அமைச்சின் வேலைத் திட்டங்கள் தொடர்பாக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கடந்த வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதி இருபத்தைந்து கோடி ரூபாவை திறைசேரி இதுவரை வழங்காமையினால் கல்வி அமைச்சின் சில வேலைகளைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

இந்த நிதியைப்பயன்படுத்தி மேற்கொள்ளப்பட விருந்த கட்டட அமைப்பு, கொடுப்பனவுகள், மற்றும் தளபாடக் கொள்வனவு என்பனவே நிறுத்தப்பட்டிருக்கிறது.

கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லொக்கு பண்டார தலைமையில் சென்ற வாரத்தில் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கல்விக்கென ஒதுக்கப்படும் நிதியில் வருட இறுதி மாதங்களின் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கு திறைசேரி பின்நிற்பதால் சிரமம் ஏற்படுவதாக நிதி அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

### முத்திரை தட்டுப்பாடு

(வடமராட்சி)

பருத்தித்துறை தபாலகத்தில் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. சகல தரப்பிலான முத்திரைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

(யோ)

# காமினியை சேர்ப்பது பற்றி ஐ. தே. கவே முடிவெடுக்கும்!

(கொழும்பு)

காமினி திசநாயகாவை ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ப்பது சம்பந்தமாக ஐக்கிய தேசிய கட்சியே தீர்மானிக்கும் என்று கட்சியின் உயர் பீடம் உறுதிபடக் கூறியுள்ளது.

ஏனைய அரசியல் கட்சிகள் காமினி திசநாயகாவை ஐ. தே கவுடன் இணைப்பது சம்பந்தமாக தீர்மானிப்பதை ஐ. தே. க விரும்பவில்லை.

தோட்டங்களில் முந்நூறு நாள் வேலை வழங்குதல் பற்றிய தொண்டமானின் கோரிக்கையைத் தவிர மற்றைய விவகாரங்களில் அரசாங்கத்திற்கும் இ தொ காவிற்குமிடையே இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஹட்டனில் தொழிற்கல்வி நிலையம் தொடங்க, அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. மற்றும் மத்திய மாகாணசபை கல்வி அமைச்சர் பதவி இ. தொ. காவிற்கு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரஸ்லர் சட்ட ரத்து; இந்தியா எச்சரிப்பு

(டில்லி)

பிரஸ்லர் திருத்தச் சட்டந்தை இரத்துச் செய்வது பாகிஸ்தானின் இரகசிய

துள்ள அமெரிக்க செனட்டர் லாறி பிரஸ்லர் உட்பட மூன்று அமெரிக்க செனட்டர்களைக் கௌரவிக்கும்

# கொள்கை முரண்பாடால் பா. மக்கள் கட்சியில் பிளவு

லங்கைப் பத்திரிகைகளும் அரசியல்வாதிகள் போன்று கணிசமான பங்கு ஆற்றியே வந்துள்ளன. ஆனால், அன்று அரசியல்வாதிகளுக்கும் - குறிப்பாக அரசாங்கத்திற்கும் பத்திரிகைகளுக்கும் இடையில், ஒரே கொள்கை இருந்ததினால், அரசாங்கம் கூறுவதை பத்திரிகைகளும் முழுமையாக ஏற்றுக் கொண்டன. இதேபோன்றே சமூக மற்றும் கலாசார சீர்கேட்டிற்கும் அசாங்கம் கணிசமான பங்காற்றிவந்தது.

இந்த வகையில், கடந்த காலத்தில் பத்திரிகைகள் விட்ட தவறிற்கு தனியாக அவை மட்டும் காரணமல்ல. அரசாங்கம் அவற்றை தவறாக வழிநடத்திச் சென்றமையே காரணமாகும். எடுத்துக்காட்டாக 'லங்கா புவத்' போன்ற செய்தி ஸ்தாபனங்களால் முற்றிலும் உண்மைக்கு புறம்பான செய்தியினை அரசாங்கமே வெளியிட்டுவந்தது. பத்திரிகைகளும் அவற்றை கேள்வியின்றிப் பிரசுரித்து வந்தன.

இந்நிலையில், அண்மைக் காலத்தில் ஏற்பட்ட இராணுவத் தோல்விகள் கொழும்புப் பத்திரிகைகளுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தன. அவர்கள் எண்ணியது போன்றோ, அன்றி அரசு கூறியதுபோன்றோ, தமிழர் தேசிய இனப் போராட்டம் இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாமல் போனமை அவற்றிற்குப் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தின. இதன் காரணமாக அவற்றின் ஆத்திரம் அரசாங்கத்தின் மீது திரும்பியது.

இதைத் தொடர்ந்து பத்திரிகைகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்தன. யுத்தத்தின் தோல்வி குறித்த செய்திகளும், விமர்சனங்களும் அரசாங்கத்தைப் பலவீனப் படுத்துபவையாக இருந்ததினால், அரசாங்கம் கொதிப்படைந்து. அதுவும், அடுத்த வருடத்தில் தேர்தலை எதிர்நோக்கியுள்ள நேரத்தில் பத்திரிகைகளின் இச்செயற்பாடு அரசாங்கத்திற்குப் பெரும் கெடுதல் விளைவிப்பனவாக உள்ளன.

இதனைத் தொடர்ந்துதான் அரசாங்கம் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுகின்றன என்ற ரீதியில் பத்திரிகைகளின் செயற்பாடுகளுக்கு தடைவிதிக்க முற்படுகின்றது. அத்தோடு, சமூகச் சீர்கேடு தொடர்பான அம்சங்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிப்பதில் அக்கறை காட்டுவதாகக் காட்டிக் கொள்ளவும் தலைப்படுகின்றது.

ஆனால், இதில் பலவற்றிற்கும் பத்திரிகைகளோ அன்றி, ஏனையவற்றைப் பிரசுரிப்பவர்களோ காரணமல்ல. ஏனெனில், இவற்றின் தூண்டுதல்கள் யாவும் அரசாங்கத் தரப்பில் இருந்தே உருப் பெற்றவையாகும். யுத்தத்தைப் பற்றிய உண்மைத் தகவல்களை அரசாங்கம் எவ்வாறு பத்திரிகைகளுக்கும் மக்களுக்கும் சென்றடையாமல் தடுத்ததோ, அதற்கு எதிர்மாறாக, கலாசார மற்றும் சமூக சீர்கேடுகள் மக்களைச் சென்றடைய வழிவகுத்தது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே ஆகும்.

தென்னிலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள சமூகச் சீர்கேட்டிற்கு முக்கியமான காரணங்களாக அமைந்தவை சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடித்த திறந்த பொருளாதாரக் கொள்கையும், உல்லாசப் பிரயாணிகள் வருகைக்கான நடவடிக்கைகளுமே ஆகும். இவற்றுடன் சேர்ந்தே சமூகக் கலாசார சீர்கேடுகள் தென்னிலங்கையில் புகுந்து கொண்டன. எடுத்துக்காட்டாக சமூக, கலாசார அம்சங்களை சீர்கெடுக்கும். ஆங்கிலப்படங்களை அனுமதிக்கும் சிறிலங்கா அரசாங்கம் உள்ளூர் பிரசுரங்களை தடுக்கமுற்படுவது வேடிக்கையானதொன்றாகவே உள்ளது. அதேபோன்றே உல்லாசப்பயணிகளை வரவழைத்துவிட்டு போதைப பொருட் பாவனை பாலியல் சீர்கேடுகள், மற்றும் ஏயிட்ஸ் போன்றவற்றைப் பற்றிப் பேசுவதும் ஆகும்.

இந்த வகையில், சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது பத்திரிகைகளின் மீது கொண்டுவர முற்படும் கட்டுப்பாடுகள் என்பது. உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளிவருகின்றன என்பதினாலல்ல. உண்மைகள் வெளிவருகின்றன என்பதினாலேயே ஆகும். இவ்வாறு வெளிவரும் உண்மைகள் அரசாங்கத்தையே ஆபத்திற்கு உள்ளாக்கிவிடும் என்ற அச்சத்தினாலும் ஆகும். இது ஓர் ஊர்வாயை மூடும் முயற்சியாகும்.

---

படையைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் உட்பட சுமார் 340பேர் இருந்ததாகவும் இவர்களில் 115பேர் மட்டுமே காயமடைந்தோ அன்றி காயமின்றியோ உயிர் தப்பிக் கொண்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன்இந்தநாகதேவன் துறை முகாம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டமையினால் இதற்கு ஏற்பட்ட சேதம்

தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் இவ்வருடம் 2000 பனைவிதைகளை நாட்டியுள்ளனர். சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம் ஆகிய இடங்களில் இவ் விதைகள் நாட்டப்பட்டுள்ளன.

(கொழும்பு)

காமினி திசநாயகாவை ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ப்பது சம்பந்தமாக ஐக்கிய தேசிய கட்சியே தீர்மானிக்கும் என்று கட்சியின் உயர் பீடம் உறுதிபடக் கூறியுள்ளது.

ஏனைய அரசியல் கட்சிகள் காமினி திசநாயகாவை ஐ. தே கவுடன் இணைப்பது சம்பந்தமாக தீர்மானிப்பதை ஐ. தே. க விரும்பவில்லை.

தோட்டங்களில் முந்நூறு நாள் வேலை வழங்குதல் பற்றிய தொண்டமானின் கோரிக்கையைத் தவிர மற்றைய விவகாரங்களில் அரசாங்கத்திற்கும் இ தொ காவிற்குமிடையே இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஹட்டனில் தொழிற்கல்வி நிலையம் தொடங்க, அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. மற்றும் மத்திய மாகாணசபை கல்வி அமைச்சர் பதவி இ. தொ. காவிற்கு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## பிரஸ்லர் சட்ட ரத்து; இந்தியா எச்சரிப்பு

(டில்லி)

பிரஸ்லர் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வது பாகிஸ்தானின் இரகசிய அணுஆயுதத் திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது போலாகி விடும் என்று இந்தியா எச்சரிக்கை செய்துள்ளது.

அத்துடன் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய எப் - 16 ரக விமானங்களையும், பெரும் அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஏவாயுதங்களையும் பாகிஸ்தான் பெறுவதற்கும் இதன்மூலம் வழி ஏற்படும் என்று இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு வருகை தந்துள்ள அமெரிக்க செனட்டர் லாறி பிரஸ்லர் உட்பட மூன்று அமெரிக்க செனட்டர்களைக் கௌரவிக்கும் வகையில் அளிக்கப்பட்ட விருந்துபசார வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் மேலும் கூறுகையில், அமெரிக்க அரசு பிரஸ்லர் சட்டத் திருத்தத்தை ரத்துச் செய்தால் தெற்காசியப் பகுதியில் நிலையற்ற தன்மை ஏற்படும் என்றும், அவ்வாறு ஆயின் இந்தியா தனது பாதுகாப்புக் கொள்கைகளை மறுபரிசீலனை செய்யும் என்றும் தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் பரிசீலனை;

## காங்கிரஸ் கட்சியினால் இரு கமிட்டிகள் நியமனம்

(டில்லி)

தேர்தல் முடிவுகளைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்காக இரண்டு கமிட்டிகளை காங்கிரஸ் கட்சி நியமித்துள்ளது. கட்சியின் தலைவர் பி.வி.நரசிம்மராவினால் நியமிக்கப்பட்டுள்ள இக் கமிட்டிகளில் ஒன்று உத்தரப்பிரதேச மாநில தேர்தல் முடிவு தொடர்பாகவும், மற்றையது ஏனைய மாநில தேர்தல் முடிவுகள் தொடர்பாகவும் ஆராயும்.

சமீபத்திய தேர்தல்களில் காங்கிரஸ்கட்சி தோல்வியடைந்தமைக்கான அரசியல் பொருளாதார சமூக மற்றும் கட்டமைப்புரீதியிலான காரணங்கள் பற்றி இக் கமிட்டிகள் ஆராய இருப்பதுடன், வருங்கால செயற்திட்டம் தொடர்பாகவும் சிபார்சு செய்ய இருக்கிறது.

## ரபீன் - அரபாத் பேச்சுக்களில் இணக்கம்காணப்படவில்லை

(கெய்ரோ)

காஸா நிலப்பகுதி மற்றும் ஜெரிக்கோ நகரப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய துருப்புக்களை மீளப் பெறுவது தொடர்பான பேச்சுக்களில் இணக்கம் காணப்படவில்லை.

இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ரபீனும், பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தும் எகிப்திய தலைநகர் கெய்ரோவில் கடந்த ஞாயிறன்று சந்தித்து இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட போதும் இதற்கான இணக்கம் எட்டப்படவில்லை. எனினும் பத்து நாட்களுக்குள் மீண்டும் சந்திக்க இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ரபீன் தெரிவித்தார்.

காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் மீளப் பெறப்படுவதற்கு இன்றுதான் கடைசி நாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கொள்கை முரண்பாடால் பா. மக்கள் கட்சியில் பிளவு

(சென்னை)

கூட்டணி அமைப்பது தொடர்பாகவும், இலங்கைத் தமிழர் தொடர்பான கொள்கைகளாலும் பாட்டாளி மக்கள் கட்சி பிளவுபட்டதாக பி. பி. ஸியின் சென்னை செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

தாமே உண்மையான பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் எனக்கூறிக்கொள்ளும் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பண்ருட்டி ராமசந்திரன் விடுதலைப்புலிகளிடமிருந்து விலகி காங்கிரஸ் மற்றும் தி. மு கவுடன் கூட்டு சேர்ந்து ஜெயலலிதாவின் ஆட்சியை கவிழ்க்க முனைகிறார். ஆனால் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ், இலங்கையில் தமிழர்களுக்கென ஒரு பகுதியை பிரித்து தமிழீழம் என அமைத்து தரவேண்டிய தார்மீக பொறுப்பு இந்தியாவிற்கு உண்டு என்றும், அத்தகைய ஒரு நாட்டை பெறவே விடுதலைப்புலிகள் போராடி வருகின்றனர் எனவும் கூறுகிறார். புலிகளின் போராட்டத்தை விடுதலைப் போராட்டம் எனவும், மனிதாபிமான அடிப்படையில் இந்தியா புலிகளுக்கு அவர்களின் கொள்கையில் வெற்றி பெற துணை புரியவேண்டும் எனவும் ராமதாஸ் கூறியுள்ளார்.

## அமெரிக்கர் எலும்புக்கூடு ஒப்படைப்பு

யுத்தத்தின் போது கொல்லப்பட்ட எட்டு அமெரிக்கரின் எலும்புக்கூடுகளை வியட்நாம் அமெரிக்காவிடம் ஒப்படைத்தது.

வியட்நாம் யுத்தத்தின் போது காணாமல் போன அமெரிக்க இராணுவத்தினர் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தும்முகமாக அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சர் வியட்நாம் வந்துள்ளார். வியட்நாம் யுத்தத்தில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரில் 8 பேரின் எலும்புக்கூடுகளையே வியட்நாம் கையளித்துள்ளது. இந்த எலும்புக்கூடுகள் இராணுவ மரியாதைகளுடன் அமெரிக்க விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டன,

## கோபுரம் அழிப்பு

கிழக்கு ஜேர்மன் எல்லை பாதுகாப்புக்களை அழிக்கும் பணியை ஜேர்மனி பூர்த்தி செய்துள்ளது. குன்று ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு கோபுரம் ஒன்று இடிக்கப்பட்டது. 43 அடி உயரமான இக்கோபுரம் முன்பு கிழக்கு ஜேர்மனியிலிருந்து தப்பி செல்பவர்களை கண்காணிக்கவும் சுட்டுக்கொல்லவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. வேறு 36 கோபுரங்கள் நினைவு சின்னங்களாக விடப்பட்டுள்ளன.

## அ. தி. மு. க. உதவியை காங்கிரஸ் நாடவில்லை

(சென்னை)

பங்குப் பத்திர ஊழல் தொடர்பாக விசாரிக்கும் பாராளுமன்ற கூட்டுக்கமிட்டி அதன் முடிவுகளை வெளியிட இருக்கும் நிலையில் இது தொடர்பாக அ. இ அ. தி. மு. கவின் உதவியை காங்கிரஸ் கட்சி நாடியிருப்பதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானதுஎன்றுமத்தியதொழில் துறை இணை அமைச்சர் எம். அருணாசலம் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் கட்சியின் தேர்தல் கூட்டணி தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், தற்போது தேர்தல் எதுவும் இல்லாத நிலையில் கூட்டணி பற்றிய பேச்சுக்கே இடமில்லை எனவும், கட்சித் தலைமை இது தொடர்பாக எடுக்கும் முடிவுக்கு கட்சியின் மாநிலக் கிளை கட்டுப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## சபாநாயகர் பதவிக்கு சுனில்ராம் நிறுத்தப்படுவார்

(டில்லி)

உத்தரப் பிரதேச சட்டப் பேரவையின் சபாநாயகர் பதவிக்கான வேட்பாளராக சமாஜவாதி ஜனதாக் கட்சியின் சார்பாக சுனில் ராமை நிறுத்துவதென சமாஜவாதி ஜனதா மற்றும் பகுஜன் சமாஜ் கட்சிக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

லக்னோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய மாநில சட்டப் பேரவை விவகாரங்களுக்கான அமைச்சர் பிரசாத் வர்மா இதனைத் தெரிவித்தார்.

நாளை வியாழக்கிழமையன்று சபாநாயகர் பதவிக்கான தேர்தல் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது

பாஜ்கள் பழுதடைந்தமையால்

# கப்பலில் இருந்து பொருள்கள் இறக்குவது ஸ்தம்பிக்கும் நிலை

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கி எடுத்து வரப்பயன்படும் இழுவைப்படகுகள் (பாஜ்கள்) மோசமாக பழுதடைந்துள்ளதால்பொருள்களை இறக்கும் வேலைகள்விரைவில்ஸ்தம்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது பாவனையில் உள்ள நான்கு இழுவைப்படகுகளில் காணப்படும் பல துவாரங்கள் தற்போது ஒட்டும் வேலைக்கு உட்படுத்தப்பட்டுள்ள போதிலும் இவற்றை தொடர்ந்து நீண்ட நாட்களுக்கு பயன்படுத்த முடியாது என தெரிவிக்கப்படுகிறது.

இப்போது பாவனையில் உள்ள இழுவைப் படகுகள் தலா இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களை கொண்டுள்ளன படகினுள் செல்லும் கடல் நீரை வெளியேற்றஇவை பயன்படுத்தப்படுகின்றனஇந்நடவடிக்கை மேலதிகசெலவீனத்தை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை இவ் இழுவைப் படகுகளில் இறக்கி வரப்படும் உணவுப் பொருள்கள் பெரும்பாலும் பழுதடைந்து போகின்றன. பயணிகள் நோயாளிகள் கூட பலத்த சிரமத்தின் மத்தியில் பயப்பீதியுடனேயே செல்ல வேண்டியுள்ளது.

இதுவரை காலமும் சுமார் 500முதல் 800 மெற்றிக் தொன் வரையான பொருள்கள் நாளொன்றிற்கு இறக்கப்பட்டன. தற்போது இழுவைப் படகுகளில் ஏற்பட்ட பழுதுகளால் 30 முதல் 50 மெற்றிக் தொன்களே இறக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வாதுவ கப்பல் 3000 மெற்றிக் தொன் மாவுடன் பருத்தித்துறையை வந்தடைந்து ஒரு மாத காலமாகியும் இன்னும் அவை இறக்கி முடிக்கப்படவில்லை. இதனால் றுகுணு மற்றும் மார்கோ கப்பல்கள் பொருள்களை இறக்காது காங்கேசனில் தரித்து நிற்பதும் குறிப்பிடத்தக்கது. (யோ)

## அரியாலை ஐக்கிய கழக விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஐக்கிய கழகம் வடமாகாண ரீதியான சுற்றுப் போட்டிகளை நடாத்த உள்ளது. அச் சுற்றுப்போட்டிகள் வருமாறு.

அமரர் ஈ.ஏ. குமரையா ஞாபகார்த்த 9பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட போட்டி, அமரர் எம். சீவரத்தினம் ஞாபகார்த்த கரபந்தாட்டப்போட்டி செற்றப் முறையினது; திருக்குமரன் மல்ரிசேவிஸ், ராணி விறகுகாலை ஸ்ரான்லி சொப்பிங் சென்ரர் ஆகியவற்றின் ஆதரவில் வலைப்பந்தாட்டப் போட்டி, ஜெயா வைன்டிங், மேகாஸ் வீடியோ, ராஜா பிரம்புத் தொழிற்சாலை ஆகியவற்றின் ஆதரவில் 7 பேர் பங்குபற்றும் மட்டுப்படுத்தப்பட்ட 12 ஓவர் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப்போட்டி ஆகியன நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியாக 50 ரூபாவை விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி இன்று ஆகும். தொடர்புக்கு செயலாளர் 383 கண்டிவீதி அரியாலை கழக காரியாலயம். எல்.கே. சண்முகலிங்கம் அரியாலை சனசமூக நிலையம் அருகில். எல். சதானந்தபோதம்ராணி விறகுகாலை அரியாலை.

## ஓராண்டு நினைவலைகள்



தாயின் மடியில்

03 - 11 - 1972

தாயக மண்ணில்

26 - 11 - 1992

### லெப். செங்கண்ணன் (பூவாசன்)

(புஸ்பம் இளங்கிரன் புங்குடுதீவு - 4)

திதி: 15-11-93

அந்நியனை அழித்துநீ அகிலத்தில் உரமானாய்

## பங்கீட்டு அடிப்படையில் 2 லீற்றர் மண்ணெய்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 11-ம்திகதிபருத்தித்துறை வந்தடைந்த எம். வி. 'மார்க்கோ' என்ற கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள மண்ணெண்ணெய் பொது மக்களுக்கு பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படவுள்ளது. குடும்ப அட்டை ஒன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய், லீற்றர் இருபத்தைந்து ரூபா விலையில் விநியோகிக்கப்படும் எனவும் இதற்கென ஒவ்வொரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டினை காசோலையைச் செலுத்தி அதற்கான வழங்கல் கட்டளையை செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்று பருத்தித்துறை இறங்கு துறையிலேயே சங்கங்கள் பெற்றுக் கொள்ளும் படியும் புனர்வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (22)

## யாழ் மாவட்ட ஆசிரியருக்கு சமயபாட கருத்தரங்கு

(நல்லூர்)

யாழ். மாவட்டப் பாட... ரங்கு யா| கனகரத்தினம்...

### உதைபந்தாட்டம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர் நிர்மாண நிதிக்காககுருநகர்பாடும்மீன்விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டி இன்று யாழ். பரியோவான் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாக உள்ளது.

இப்போட்டி இன்று தொடக்கம் 24 - 12 - 93 வரை நாளாந்தம் இரு போட்டிகள் என்ற ரீதியில் நடைபெறும். யாழ். மாவட்டத்தின் உதைபந்தாட்டக் கழகங்களான பாடும்மீன்வி. க, சென்மேரிஸ் வி. க, சென் அன்ரனிஸ் வி. க, றோயல் வி.க, யங் கென்றிஸ் வி க, அரியாலை வி க, சென் நிக்கலஸ் வி. க, வினாயகர் வி. க. ஸ்கந்தா வி. க, ஞானமுருகன் வி. க. ஆகிய பத்துக் கழகங்கள் பங்கேற்கின்றன.

26-12-93, 27-12-93 இரு நாட்களிலும் இறுதிப் போட்டிகள் நடைபெறும் ஆட்டங்கள் நாளாந்தம் பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளன. (17)

## இசை,நடன நிகழ்ச்சி

'ஆற்றல்களைத் தேடி'.... நுண்கலைத்துறை மாணவர்களுடைய ஆற்றுகைத்திறங்களை வெளிக்கொணர்வதற்கான ஒரு முதல் முயற்சியாக நாளை வியாழக்கிழமை பி ப 3. 30 மணிக்கு இசை, நடன நிகழ்ச்சி ஒன்று நடைபெற உள்ளது.

# ரஷ்ய பாராளுமன்ற தேர்தலில் தீவிர தேசியவாதிகள் வெற்றி

(மாஸ்கோ)

ரஷ்யாவில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தீவிர தேசியவாதிகளின் எல். டி. கட்சி முன்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது தேர்தல் நடத்த ரஷ்யாவின் 88 பிராந்தியங்களில் 87 பிராந்தியங்களில் வெளியான முடிவுகளின்படி கிளாடிமிர் சினேவன்ஸ்கி எல். டி. கட்சி 24 சதவீத வாக்குகளையும் ஜனாதிபதி யெல்சினின் கட்சி 15 சதவீத வாக்குகளையும், கம்யூனிஸ் கட்சி 11சதவீத வாக்குகளையும் பெற்றதாக தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

இராணுவத்தினரில் பலர் தீவிர தேசியவாதக் கட்சியான எல். டி. கட்சிக்கே வாக்களித்துள்ளனர். யெல்சினின் கட்சி அவரின் சொந்த பிராந்தியத்திலேயே பின்னடைந்துள்ளது தேர்தல் முடிவு அரசின் சீர்திருத்த முறைகளுக்கு எதிராக மக்களளித்த தீர்ப்பு என முன்னாள் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்தார். ரஷ்ய தேர்தலில் எல். டி. கட்சி வெற்றிபெற்றதுகுறித்து தாம் அதிர்ச்சியடையவில்லை என அமெரிக்க ஜனாதிபதி கிளிங்ரன் கூறினார். தீவிர தேசியவாதிகள் வெற்றிபெற்றமை குறித்து பிரிட்டிஷ் பத்திரிகைகள் அச்சம் தெரிவித்துள்ளன.

### கொழும்பு

திற்குள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ''டைகர்'' எனப்படும் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் எரிபொருளை நிரப்பிக்கொண்டுசென்றுவிட்டது மற்றைய கப்பலான 'மத்திலா' கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இவ்இருகப்பல்களையும் துறைமுக களஞ்சியத்தின் தமிழ் உயர் அதிகாரி ஒருவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி துறைமுகத்தினுள் நுழைய அனுமதி பெற்றுக்கொடுத்துள்ளார்.

மேலும் இவ்உயர் அதிகாரி துறைமுகம் தொடர்பாக அறிந்துகொள்ள உதவியுள்ளார் எனவும் பொலிசாரின் விசாரணைகளிலிருந்து அறியப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவ் அதிகாரி சிறிது காலத்திற்கு முன் தலைமறைவாகி விட்டதாகவும் இவர் புலிகளின் தீவிர ஆதரவாளர் என்றும் இவரைத்தேடி வலை வீசப்பட்டுள்ளது என்றும் பொலிசார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து துறைமுகப் பகுதிக்கு ஆயுதம்ஏதும்ஒளித்து வைக்கப்பட்டுள்ளதா? என சோதனை இடப்பட்டுள்ளது இச்சோதனை இரகசியமாக நடத்தப்பட்டதெனவும் இவற்றிலிருந்து புலிகளின் அடுத்த இலக்கு கொழும்பு துறைமுகம் என சந்தேகிக்கப்படுவதாகவும் சிறிலங்கா புலனாய்வுத் துறையினர் கூறுகின்றனர்.

### போர்முனைத்

காலத்திற்கு ஒருதடவை முகாமிலுள்ள இராணுவத்தினர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்

### ஒத்திவைப்பு

'கலைஞனும் படைப்பும்' என்றதொடரில்,இன்றுஏ.கே. கருணாகரன் நிகழ்த்தவிருந்த இசைநிகழ்ச்சி, தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறமாட்டாது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

14 - 12 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11704

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம் இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-0416, 27-7711, 26-6335, 26-8878, 26-1989 24-1856,

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் துரைராஜா

மாணிக்கம் துரைராஜா காலமானார். இவர் களபூமி காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற மாணிக்கம் அன்னம்மா தம்பதிகளின் மகனும், ஜெயலலிதாவின் அன்புக் கணவரும், நிரஞ்சன், நிசாந்தினி, வனஜா, ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடராஜா, தியாகராஜா, செல்வராஜா, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஸ்வேஸ்வரி, இரத்தினம்மா, பரமேஸ்வரி, சௌவுந்தரராசா, ஜான், இலங்கநாதன், நித்தியவாணி, கவிதாராணி, கோவிந்தி ஆகியோரின் மாமனாரும். திரு. திருமதி கணேசு செல்லம்மாவின் மருமகனும் ஆவார். இவரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெற்று தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

காளிகோவிலடி,
தாவடி வடக்கு (6896) மனைவி

### திருமதி கோபிநாத்சிங் சற்குணநாயகி

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி கோபிநாத்சிங் சற்குணநாயகி 14-12-93 நேற்று காலமானார் அன்னார் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட பொ.கோபிநாத்சிங்(சுவிஸ்) அவர்களின் அன்பு மனைவியும், கோகுலன் (வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி), இராகுலன் (உரும்



தாயின் மடியில்

03 - 11 - 1972

தாயக மண்ணில்

26 - 11 - 1992

## லெப். செங்கண்ணன் (பூவாசன்)

(புஸ்பம் இளங்கீரன் புங்குடுதீவு - 4)

திதி: 15-11-93

அந்நியனை அழித்துநீ அகிலத்தில் உரமானாய்
மீண்டும்நீ வந்துதித்து மீட்டீழம் தந்துவிடு
ஆண்டொன்று சென்றாலும் அழியாது உன்னுருவம்
மீண்டும்நீ வந்தாலே மீளாது எம்துயரம்.

15-12-93 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்.

111, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

பூவாசன் குடும்பத்தினர்

(6897)

## நன்றி நவிலல்

### அமரர் L. றேமன் முத்தையா

(இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகாப் பொறியியலாளர், சர்வதேச லியோ கழகங்களின் மாவட்டத் தலைவர்)

மலர்வு: **3-12-1925**

உதிர்வு: **3-12-1993**

அன்புநிறைந்த அருமை மிகுந்த எமது தலைவர், தந்தை அமரர் L. றேமன் முத்தையா அவர்கள் 3-12-93இல் திடீரென இறைபதமெய்தி எம்மையெல்லாம் திகைப்பிலும், மனவேதனையிலும் ஆழ்த்தியிருந்தவேளை அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரில் மலர் வளையங்களும், மலர் மாலைகளும் அணிவித்தும், இரங்கல் உரைகள் ஆற்றியும், கலந்து கொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அனைத்து லயன்ஸ், லியோ, வை எம். சி. ஏ. கழகத்தினர்கள், ஆர். ஆர். எவ் 83, டி. ஆர். ஆர். ஒ., மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்புச் செயற்குழுவினர்களுக்கும், மற்றும் ஸ்தாபனத்தினர்களுக்கும், இறுதிச்சடங்குத் திருப்பலிப் பூசையில் பங்குகொண்ட அனைத்து குருக்கள், கன்னியர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இன்று 15-12-93 புதன்கிழமை காலை 10 மணிக்கு புனித யுவானியார் தேவாலயத்தில் நடைபெறவிருக்கும் இரங்கற் திருப்பலிப்பூசையிலும் பங்குகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

67/1, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(6894)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 2 லீற்றர் மண்ணெண்ணெய்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 11-ம்திகதிபருத்தித்துறை வந்தடைந்த எம். வி. 'மார்க்கோ' என்ற கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள மண்ணெண்ணெய் பொது மக்களுக்கு பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படவுள்ளது. குடும்ப அட்டை ஒன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய், லீற்றர் இருபத்தைந்து ரூபா விலையில் விநியோகிக்கப்படும் எனவும் இதற்கென ஒவ்வொரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டினை காசோலையைச் செலுத்தி அதற்கான வழங்கல் கட்டளையை செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்று பருத்தித்துறை இறங்கு துறையிலேயே சங்கங்கள் பெற்றுக் கொள்ளும் படியும் புனர்வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (22)

## யாழ் மாவட்ட ஆசிரியருக்கு சமயபாட கருத்தரங்கு

(நல்லூர்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சைவசமய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவசமய பாடக் கருத்தரங்குகளை இரு பிரிவுகளினடிப்படையில் நடாத்த யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பி நடவடிக்கை எடுத்துள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.30மணி வரை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான சைவ சமயக் கருத்தரங்கு நடைபெற உள்ளது.

வடமராட்சி ஆசிரியர்களுக்கான சைவசமயக் கருத்தரங்கு வடமராட்சி மத்திய கல்லூரியிலும் சாவகச்சேரி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் யாழ்ப்பாண வேலணைக் கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யா/ கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்திலும், மருதனார்மடம், பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யா/ இராமநாதன் கல்லூரியிலும் நடைபெற உள்ளன.

இடைநிலைச்சைவசமயபாட ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு 18-12-93 19-12-93 தினங்களில் மு.ப. 8.30மணி முதல் பி. ப. 4.30 மணிவரை நடைபெற உள்ளது.

மேற்கூறிய ஆறு கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கான மேற்படி கருத்தரங்கு முன்னர் குறிப்பிட்ட பாடசாலைகளிலேயே நடைபெற உள்ளது. இவ்விரு சைவசமய பாடக் கருத்தரங்கிலும் சுமார் 312 ஆசிரியர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள். (17)

### பொய்த்தகவலை

எடுக்கப்படவுள்ள இந் நடவடிக்கையின் கீழ் குற்றவாளியாக கருதப்படும் ஒருவருக்கு ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத அபராதம் அல்லது இரு வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இவ்விரு தண்டனைகளும் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் இராணுவத்தோல்விகளை அப்பட்டமாக வெளியிட்டு பல பிரசுரங்கள் கொழும்பில் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### மீனவர்

ணங்களை கைவிட்டும் உயிர்ச்சேதம் எதுவுமின்றி கரை சேர்ந்தனர். தாக்குதலை நடாத்திய இரு படகுகளும் அவ்விடத்தை விட்டுச் சென்றபின் கடலில் கைவிட்ட மீன்பிடி உபகரணங்களை மீனவர்கள் திரும்பச் சென்று மீட்டு வந்துள்ளனர். (41)

### ஓய்வு

இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தும் பொருட்டே இந் நடவடிக்கை என அரசாங்கம் கூறுகிறது.

தற்பொழுது இத்தீர்மானம் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை யுத்தத்திற்கு தேவையான செயல்முறை, தொழில்நுட்பம் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்க தாம் தயாராக இருப்பதாக பதவியிலிருந்து விலகிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலானஅதிகாரிகள் இவ்வாறு ஆலோசனைகளை வழங்க தயாராக இருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இவர்களில் அநேகர் இப்பொழுது வெளிநாடுகளில் இருப்பதாகவும் அரசாங்கம் விரும்பும் பட்சத்தில் தாம் வந்து ஆலோசனைகளை வழங்க தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளனராம்.

றும் இவரைத்தேடி வலை வீசப்பட்டுள்ளது என்றும் பொலிசார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து துறைமுகப் பகுதிக்கு ஆயுதம்ஏதும்ஒளித்து வைக்கப்பட்டுள்ளதா? என சோதனை இடப்பட்டுள்ளது இச்சோதனை இரகசியமாக நடத்தப்பட்டதெனவும் இவற்றிலிருந்து புலிகளின் அடுத்த இலக்கு கொழும்பு துறைமுகம் என சந்தேகிக்கப்படுவதாகவும் சிறிலங்கா புலனாய்வுத் துறையினர் கூறுகின்றனர்.

### போர்முனைத்

காலத்திற்கு ஒருதடவை முகாமிலுள்ள இராணுவத்தினர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் தேவையான மருத்துவ சிகிச்சை ஆலோசனை வழங்கப்படும் என்றும், சுகாதார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இக் குழுவுக்கு நாடுபூராவும் உள்ள நிபுணர்கள் சேவை அவசியமானது என்றும் பூநகரி தாக்குதலை தொடர்ந்து சிகிச்சையில் ஏற்பட்ட மந்தநிலை தொடர்ந்தே இவ் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

### புலிகளின்

ணிக்கவெனமுள்ளிக்குளத்தில் கடற்படைத்தளம் ஒன்றை அமைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக மன்னார்த்தீவின் அண்மையாகவுள்ள சிறு தீவுகளில் உள்ள மீனவர்களுடனும், கற்பிட்டி மீனவர்களுடனும் விடுதலைப் புலிகள் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதன் காரணமாக கொழும்பிற்கும் கற்பிட்டித்தளத்திற்கும் மன்னாருக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் கடற்படைக் கப்பல்கள் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மதியல்

மதியஉணவு முத்திரைக்கான கொடுப்பனவுகள் கல்வி அமைச்சினால் வழங்கப்பட வேண்டியதெனவும் தம்மிடம் சமர்ப்பித்த விபரத்தின் படி 29 மில்லியன்ரூபா செலுத்த வேண்டியுள்ளதாகவும் இவை 23 சங்கங்களுக்குரியவை என தெரிவித்தார். இக் கொடுப்பனவுக்கான ஒழுங்குகளை அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் மேற்கொண்டுள்ளதாகவும் அரச அதிபர் வந்த பின்னரே மேற்கொண்டு என்னசெய்வதென தீர்மானிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (சி)

வரி, இரத்தினம்மா, பரமேஸ்வரி, சௌவுந்தரராசா, ஜான், இலங்கநாதன், நித்தியவாணி, கவிதாராணி, கோவிந்தி ஆகியோரின் மாமனாரும். திரு. திருமதி கணேசு செல்லம்மாவின் மருமகனும் ஆவார். இவரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெற்று தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

காளிகோவிலடி, தாவடி வடக்கு

(6896)

மனைவி

## திருமதி கோபிநாத்சிங் சற்குணநாயகி

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி கோபிநாத்சிங் சற்குணநாயகி 14-12-93 நேற்று காலமானார் அன்னார் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட பொ.கோபிநாத்சிங்(சுவிஸ்) அவர்களின் அன்பு மனைவியும், கோகுலன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி), இராகுலன் (உரும்பராய் இந்துக்கல்லூரி), திலகாயினி (அராலிசரஸ்வதி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, பூமலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், உரும்பராய் தெற்கு சி. த. பொன்னுத்துரை, பரமேஸ்வரி, காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், இரத்தினம்மா, குணநாயகம், செல்வநாயகி, சண்முகவடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிதம்பரநாதர் (ஆயுர்வேத வைத்தியர்), கமலாதேவி, சந்திரசேகரம், குகநேசமலர் (ஆசிரியை உரும்பராய் இந்துக் கல்லூரி), சற்குணநாதன் சீமேந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), சரச்சந்திரன் (ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்ட்), அனுராதா, விவேகினி, செந்தூர்ச்செல்வா, அனித்தா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். மரணக் கிரியைகள் அராலி மேற்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக 15-12-93 காலை 11-00 மணிக்கு அராலி வேலங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

(6895)

- குடும்பத்தினர்

## திருமதி மங்களேஸ்வரி சச்சிதானந்தம்

கச்சாய் றோட், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட (முன்னாள் ஆசிரியை) சச்சிதானந்தம் மங்களேஸ்வரி 13-12-93 அன்று காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற நா. சச்சிதானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், வ. நாகமலர் (நெல்லியடி, ப. நோ. கூ. சங்கம்) அவர்களின் அன்புச் சகோதரியும், ஆனந்தரூபி, ஆனந்தராசன் (மங்களா கிரைண்டிங் மில், ஈச்சமோட்டை), ஆனதந்பாலன் (மங்களா மல்டி சொப்), ஆனந்தேஸ்வரி, ஆனந்தகிருபன் (மங்களா அழகு சாதன மாளிகை), ஆனந்தமோகன் (மங்களா விற்பனை நிலையம்), ஆனந்தசபேசன் (மங்களா அழகு சாதன மாளிகை), ஆனந்தமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமநாதன் (R P.N மில்), சச்சிதானந்தம் (மின்சார பொருத்துனர்), குகநேசன் (யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன முகாமையாளர், மருதனார்மடம்), லீலாவதி, வசந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜீந்திரன், வஜிதா, ஹரிகரன், டஷாந்தன், பிரசாளினி, பிந்துஜன், ஜதிகாந்த் ஜேனுகானந் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 14-12-93 செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் பிற்பகல் 5-00 மணியளவில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்

**ஆனந்தகிருபன்**

(மகன்)

(மங்களா ஸ்தாபனம்)

(6892)